# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| **In the court of** | **:** | District Munsif – cum – Judicial Magistrate Court, Pennagaram. |
| **Case No.** | **:** | **CC No. 11/2023** |
| **Prosecution witness** | **:** | **PW – 8** |
| **Date** | **:** | 20.06.2025,   04.40 PM |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **K.ராஜேந்திரன்** | **Cast** | : | |
| **Father's Name** | : | கரூரான் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

(A1, A2 are Absent. Section 355 of BNSS PF & A)

**வாக்குமூலம்**

| | | |
|---|---|---|
| நீதிமன்றம் | **:** | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம். |
| வழக்கு எண். | **:** | ஆ.ப.எண். |
| வழக்கு சாட்சி | **:** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கின் மகஜர் உள்ளிட்ட ஆவணங்களை தயாரித்துள்ளேன் என்றால் சரிதான். மகஜரில் சாட்சி கையொப்பமிட்ட மாது, ஆறுமுகம் ஆகியோர்களின் வாக்குமூலங்களை நான் பதிவுசெய்தேன் என்றால் சரிதான். நானும், எனது ஊரை சேர்ந்த ஆறுமுகம் என்பவரும் "சீலநாயக்கனூரில் இருந்தபோது" என்ற வாசகம் சாட்சியங்களின் வாக்குமூலத்தில் கண்டுள்ளது என்றால் என்றால் சரிதான். அதில் குறிப்பாக எந்த இடம் என்பது வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| **In the Court of** | : | District Munsif – cum – Judicial Magistrate Court, Pennagaram. |
| **Case No.** | : | **CC No. 11/2023** |
| **Prosecution witness** | : | **PW - 9** |
| **Date** | : | 20.06.2025, 11.30 AM |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மாது** | **Cast** | : | |
| **Father's Name** | : | வடிவேல் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

(A1, A2 are Absent. Section 355 of BNSS PF & A)

**வாக்குமூலம்**

| | | |
|---|---|---|
| நீதிமன்றம் | : | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம். |
| வழக்கு எண். | : | ஆ.ப.எண். |
| வழக்கு சாட்சி | : | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**முதல் விசாரணை**

நான் தற்போது சீலநாயக்கனூரில் வசித்து கூலிவேலை செய்துவருகிறேன். புகார்தாரர் பழனி எனது ஊர்காரர் ஆவார். எதிரிகளான ராஜேந்திரன், பூவரசன் ஆகியோர் பக்கத்து ஊரான மேட்டுரான்கொட்டாயை சேர்ந்தவர்கள். புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே நிலப்பிரச்சனை இருந்துவந்தது. பின்னிட்டு கிரிமினல் கேஸ் ஏற்பட்டுவிட்டதாக சொன்னார்கள். அந்த வழக்கு சம்மந்தமாக ஏரியூர் காவல் உதவி ஆய்வாளரான ராஜேந்திரன் என்பவர் சீலநாயக்கனூரில் சண்டை நடந்த

இடத்திற்கு அருகே வரைபடம் வரைந்து எழுதிகொண்டார்கள். அதில் நானும், ஆறுமுகம் என்பவரும் கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதாகும். பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.8** ஆகும். வழக்கு குறித்து போலிசார் என்னை அதற்கு பின்னிட்டு விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் பார்வை மகஜரில் கையொப்பமிட்டபோது என்ன சம்பவம் என்பது குறித்து கேட்டார்களா? என்றால் இல்லை. மேற்படி கையொப்பத்தை சீலநாயக்கனூரில் உள்ள டீக்கடை முன்பு வைத்து போட்டேன். ஆறுமுகம் என்பவரும் டீக்கடை முன்பு வைத்து கையொப்பமிட்டார் என்றால் சரிதான். நான் ஒரே ஒரு கையொப்பம் தான் இட்டேன். வேறு கையொப்பம் எதுவும் இடவில்லை என்றால் சரிதான். கையொப்பமிட்ட மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று படித்துபார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.